www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

திருவண்ணாமலை மாவட்டம்.

# காலாண்டுப் தேர்வு – 2024

II - ஆம் வகுப்பு

## பொதுத்தமிழ்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் : அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். 2) குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும். 3) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.**

I **பலவுள் தெரிக.** 14 X 1 = 14

1. பாயிரம் இல்லது .............. அன்றே
   அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. கலைகளின் உச்சம்
   அ) கட்டுரை ஆ) கதை இ) கவிதை ஈ) நாடகம்
3. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை
   அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப்பொருள்கள்
   அ) அ – மட்டும் சரி ஆ) ஆ – மட்டும் சரி இ) இரண்டும் சரி ஈ) அ – தவறு, ஆ – சரி
4. கூற்று : "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
   விளக்கம் : கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
   அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி
   இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு
5. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
6. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்
   அ) நற்றிணை இ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு
7. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
   அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
   இ) தலைமைத் துவிபாரி ஈ) உலக நாட்குறிப்பின் தந்தை
8. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது
   அ) கனி முன் நிரை ஆ) காய்முன் நேர் இ) காய்முன் நிரை ஈ) மாமுன் நேர்
9. சேயோன் மேய மைவரை உலகம் – இப்பாடல் இடம்பெற்ற நூல்
   அ) நன்னூல் ஆ) திருக்குறள் இ) தொல்காப்பியம் ஈ) நற்றிணை
10. துன்பப்படுவர்
    அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
    இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

11. தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை வேரில்லாத மரம் கூடில்லாத பறவை எனக் கூறியவர்

அ) சு. வில்வரத்தினம் ஆ) கா. சிவத்தம்பி இ) இரசூல் கம்சதோவ் ஈ) பாரதி

12. சரியான விடையைத் தேர்க.

அ) கல்வி அழகே அழகு - 1) தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரையாடல்

ஆ) இளமையில் கல் - 2) திருமந்திரம்

இ) துணையாய் வருவது தூயநற்கல்வி - 3) ஆத்திசூடி

ஈ) பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் - 4) நாலடியார்

I) அ-4, ஆ-3, இ-2, ஈ-1 II) அ-2, ஆ-3, இ-4, ஈ-1

III) அ-3, ஆ-4, இ-1, ஈ-2 IV) அ-4, ஆ-2, இ-3, ஈ-1

13. வறுமையில் எவ்வாறு வாழ வேண்டும்?

அ) செம்மையாக ஆ) தலைகுனிவாக

இ) அடுத்தவரை எதிர்ப்பார்த்து ஈ) மானத்தைவிட்டு

14. புலன் என்னும் இலக்கிய வகையைச் சார்ந்த நூல்

அ) பள்ளு ஆ) குறுந்தொகை இ) புறநானூறு ஈ) நற்றிணை

**II அ. கீழ்வரும் வினாக்களுக்கு எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்கவும்.** 3 X 2 = 6

15. பாயிரம் பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?

16. அகநானூறு எத்தனை பிரிவுகளை உடையது? அவை யாவை?

17. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?

18. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?

**ஆ. கீழ்வரும் குறுவினா எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்.** 2 X 2 = 4

19. சங்ககால தமிழ்மொழியின் ஆதிக்கம் குறித்து மா.இராசமாணிக்கனாரின் கருத்து யாது?

20. மலைக்கு வழங்கும் வேறு சொற்களைக் குறிப்பிடுக.

21. தமிழ்நாட்டின் மாநில மரம் குறிப்பு வரைக.

**III எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 X 2 = 14

22. *வேர்ச்சொற்களைத் தொடர்களாக மாற்றுக.*

அ) வா ஆ) பேசு

23. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.*

குரை, குறை

24. *ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக.*

அ) மலிந்த ஆ) வருகின்ற

25. *கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்சொல் எழுதுக.*

அ) Book Review ஆ) Document

26. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.*

அ) காலங்காரத்தால எந்திரிச்சி படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.

27. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.*

அ) பொதுச் சிறப்பு ஆ) சிறுகோல்




Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

28. **இலக்கணக் குறிப்பு தருக.**
அ) வெண்சங்கு ஆ) நினைத்தல்

29. நிகழ்கால இடைநிலைகள் யாவை?

30. **படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.**



அ) வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.
ஆ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.
இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

IV **அ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடைதருக.** 2 x 4 = 8

31. `சலச வாவியில் செங்கயல் பாயும்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?
33. புகழுக்குரிய குணங்களாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறை வழி நின்று கூறுக.
34. `மறுவிலாத அரசென இருந்த மாநகர்' – உவமையைப் பொருளுடன் விளக்குக.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2 X 4 = 8

35. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் – குறிப்பு வரைக.
36. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.
37. மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.
38. ஐந்து வேளாண்மை மந்திரங்கள் யாவை?

V **எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 3 X 4 = 12

39. அ) வேற்றுமை அணியை சான்றுடன் விவரி. ***(அல்லது)***
ஆ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து – இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

40. பா நயம் பாராட்டுக. **மையக்கருத்தை எழுதி எவையேனும் மூன்று நயங்களை எழுதுக.**

*பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி*
*பேணி வளர்த்திடும் ஈசன்*
*மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல*
*மாதர் அறிவைக் கெடுத்தார்*
*கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்தி*
*காட்சி கெடுத்திட லாமே?*
*பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்*
*பேதமை யற்றிடும் காணீர்* – பாரதியார்

41. **தமிழாக்கம் தருக.**
1) Pen is mightier than Sword.
2) Winners don't different things they, do things differently.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

3) A picture is worth a thousand words.
4) Work while you work and play while you play.

**2. காதுகேளாதோர்க்கான மாற்று வினா.**

**1) கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை, மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல், அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சியும் பெற்று நிற்கும் மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே ; மொழியால் வளர்பவரும் மக்களே.

**– மொழி வரலாறு (மு. வரதராசனார்)**

**வினாக்கள் :**

1. மக்கள் படைத்துக் காத்துவரும் அரிய கலை எது? அது ஆற்றும் செயல் யாது?
2. தாயின் முதல் விருப்பம் என்ன?
3. மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?
4. மொழியை வளர்ப்பவரும், வளர்பவரும் யார்?

42. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.

43. சிறுதுளி பெருவெள்ளம் – என்னும் பழமொழியினை நும் வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

**VI அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 3 X 6 = 18

44. அ) மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுபுலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக. ***(அல்லது)***

ஆ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள்? ***(அல்லது)***

ஆ) தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்ர் என்பதை நிறுவுக.

46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக. ***(அல்லது)***

ஆ) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

**VII மனப்பாடப்பகுதி.** 4 + 2 = 6

47. அ) ‘ஏடு தொடக்கி வைத்து’ – எனத் தொடங்கும் யுகத்தின் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) ‘செயல்’ – என முடியும் திருக்குறளை எழுதுக.



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com